R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
April 2019






சென்னை
திருவள்ளூர்
நாமக்கல்
மற்றும்
நாகை
மாவட்டங்களில்

**ஞானஸ்நானத்தின் மூலம் புதிதாக பிறந்தவர்கள்**

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

**Every Thursday 6.00 P.M on Tamilan TV**

**&**

**Every Saturday 8.00 P.M on Nambikkai TV**

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 | ஏப்ரல் 2019 | கனி 5

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
Every Thursday 6:00 - 6:30 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV



**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 224

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. போவாஸ் நிலத்தில் சாயங்காலமட்டும் வயலில் கதிர் பொறுக்கின பெண் யார்?
2. ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றவர் யார்?
3. யாரை ராஜாவாக்கினது கர்த்தருக்கு மனஸ்தாபமாயிருக்கிறதாக எந்த தீர்க்கதரிசியிடம் சொன்னார்?
4. பவுல் எப்பட்டணத்தில் வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி கூடிவந்த சீஷர்கள் மத்தியில் நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்?
5. ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையைக் சரிக்கட்டுவார் என்ற ராஜா யார்?
6. போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசமுண்டாக்கினால் நீ எப்படிப்பட்டவனல்ல?
7. எந்த ராஜாவுடைய நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை?
8. எல்லா மனுஷரும் என்னைப்போலவே இருக்க விரும்புகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
9. குற்றப் பிராயச்சித்தப் பணமும் பாவப்பிராயச்சித்தப் பணமும் கர்த்தருடைய ஆலயத்திற்காகக் கொண்டுவரப்படவில்லை அது எவர்களைச் சார்ந்தது?
10. நீங்கள் நற்சீர் பொருந்தும்படிக்கும் விண்ணப்பம்பண்ணுகிறோம் என்ற அப்போஸ்தலன் யார்?

## வேதாகம ஆய்வு... 9

### அந்தியோகியா

1. **சீரியாவிலுள்ள கி.மு. 300ம் வருஷத்தில் கட்டப்பட்டது.**
2. **இது எருசலேமிலிருந்து 300 மையிலுக்கு அப்பாலிருந்தது.**
3. **துவக்கத்தில் இது கிரேக்க ராஜாக்களின் தலைநகரமாக இருந்தது.**
4. **இங்கே முதன் முதல் புறஜாதிகள் மனந்திரும்பி கிறிஸ்துவின் சபையில் இணைந்தனர்.**
5. **முதன் முதல் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது – அப்.11:26**
6. **பவுலும் பர்னபாவும் இங்கே தங்கி ஊழியம் செய்தனர் – அப்.15:35**
7. **பேதுருவும் அந்தியோகியாவுக்கு வந்தான் – கலா.2:11**



Antioch

சிறுவர் பகுதி

# சீமோனே! சீமோனே

*வேதபகுதி: லூாக்கா 21:31-32*



இந்த வார்த்தையை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பேதுருவைப் பார்த்து சொன்னார். பேதுருவுக்கு மற்றொரு பெயர் சீமோன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

சீமோனே, சீமோனே இதோ கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் (அதாவது பிசாசு) உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பள்ளியிலே சிலர் முந்தி முந்தி பேசுகிறவர்களை பார்த்து இருப்பீர்கள். இவர்களுக்கு முந்திரிக்கொட்டை என்று பெயர் அதைப்போல பேதுருவும் பன்னிரண்டு சீஷர்களிலே ஒருவராக இருந்தார். ஆகையால்தான் ஆண்டவர் அவரைப்பார்த்து இவ்விதமாக சொன்னார்.

நாமும் சில வேளைகளில் நம்மை நாமே கவனிக்காமல் மற்றவர்களை பார்ப்போம். முதலாவது நம்மை சரிசெய்ய வேண்டும். இல்லையென்றால் பிசாசு கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல நம்மையும் புடைக்க ஆண்டவரிடம் உத்தரவு கேட்டுக்கொள்வான். புடைக்கும்போது நாம் பதரைப் போல இருந்தோமானால் பறந்தே போய்விடுவோம். நல்ல கோதுமை மணிகளைப்போல உறுதியான விசுவாசமுடையவர்களாக இருப்போமானால் புடைக்கும்போது சுளகிலே இருப்போம் அப்படியென்றால் கர்த்தரோடு இருப்போம். ஆகையால் நாம் சரியான பிறகு நம் சகோதரர்களை ஸ்திரப்படுத்த வேண்டும்.

நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நமக்காக கர்த்தர் வேண்டுதல் செய்யக்கூடியவராக இருக்கிறார். நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் அறிந்தவராகவும் இருக்கிறார். அதேபோல பேதுருவின் விசுவாசத்தை அறிந்த ஆண்டவர் உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். ஒருவேளை கர்த்தர் வேண்டிக்கொள்ளாதிருந்தால் புடைக்கும்போது பதரைப்போல பேதுரு பறந்தேபோய்இருப்பார். ஆகையால் நீ குணப்படு என்றார். நாமும் முதலாவது குணப்பட்டு பின்பு மற்றவர்களை குணப்படுத்துவோம். அப்படியென்றால் நாம் சரியானபிறகு மற்றவர்களைச் சரிசெய்வோம். செய்வீர்களா?

**மனப்பாட வசனம்:** **"உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூக்.21:19).**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 ஏப்ரல் -2019 கனி - 5


ஆசிரியருரை

## கிறிஸ்துவின் நிருபம்
## An Epistle of Christ



ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறான். நிருபங்கள் எழுதப்பட்டுள்ளதைப்போல அவனுடைய செயல்பாடுகள் கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்கவேண்டும். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதின கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே" என்கிறார் (2கொரி.3:2). அவர்களுடைய இருதயங்களில் எழுதப்படும் அளவிற்கு நற்சாட்சியுள்ளவர்களாக கொரிந்துசபையார் இருந்திருக்கிறார்கள் ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதுகிறார். அப்படியானால் கொரிந்துசபையார் எந்த அளவு ஊழியத்தை தாங்கியிருப்பார்கள், ஊழியத்திற்கு உதவியாயிருந்திருப்பார்கள் என்பதை பவுலுடைய கடிதத்தின் வாயிலாக நாம் அறியமுடிகிறது. அப்போஸ்தலர்களுடைய ஊழியத்தைக்குறித்து ஒரு நிருபத்தை வாசித்து தெரிந்துகொள்வதைக்காட்டிலும் கொரிந்து சபையாரின் மூலமாக தெரிந்துகொள்ளலாம் அந்த அளவுக்கு அவர்கள் அப்போஸ்தலர்களைக்குறித்தும், அவர்களுடைய ஊழியத்தைக்குறித்தும் எடுத்துச் சொல்லும் நிருபங்களாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு இருக்கிற நீங்கள் உங்களுடைய சமுதாயத்தின் மத்தியில் நீங்களே நிருபங்களாக இருக்கிறீர்களா? உங்களைப் பார்த்து மற்றவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அந்த அளவு சாட்சியுள்ள மக்களாக இருக்கவேண்டும் அதையே வேதாகமம் எதிர்பார்க்கிறது. கொரிந்து சபையாரைப்போல கலாத்திய சபையாரும் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பவுல் எழுதும்போது; "அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே? உங்கள் கண்களைப் பிடுங்கி எனக்குக் கொடுக்கக்கூடுமானால், அப்படியும் செய்திருப்பீர்கள் என்று உங்களுக்குச் சாட்சியாயிருக்கிறேன்" என்கிறார் (கலா.4:15). கண்களையே பிடுங்கிக் கொடுத்ததாக கதைகளில் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே கலாத்திய சபையார் பவுல் மீது அந்த அளவு நம்பிக்கையுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பவுலுடைய இந்த கடிதமே சாட்சியாயிருக்கிறது. ஊழியர்களுக்கு உதவி செய்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த ஊழியருக்காக எதையும் செய்யும் மனதையுடையவர்களாக இந்த கலாத்திய சபையார் இருந்திருக்கிறார்கள். கண்களை பிடுங்கிக்கொடுப்பது என்பது சாதாரணவிஷயமல்ல. கண் தானம் செய்யவே யோசிக்கக்கூடிய இந்நாட்களில் கண்களையும் பிடுங்கிக்கொடுக்கவும் ஆயத்தமாயிருந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய நம்பிக்கை எத்தகையது,

அவர்கள் அப்போஸ்தலர்கள் மீது வைத்த நம்பிக்கை எப்படிப்பட்டது என்பதை எண்ணிப்பாருங்கள்.

மேலும் நிருபங்களாக இருந்த மக்கெதொனியா சபையாரைப்பற்றி 2கொரிந்தியர் 8:3-ல் வாசிக்கிறோம். "அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். கொடுத்தல் விஷயத்தில் மக்கெதொனியா சபையார் மிகவும் உற்சாகமுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அநேகர் தங்களுக்கு இருந்தால்தான் கொடுப்பார்கள் அல்லது அதிகமான வருமானம் வந்தால்தான் கொடுப்பார்கள். ஆனால் இந்த சபையார் தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்திருக்கிறார்கள். ஏழைவிதவை இரண்டு காசு போட்டதைப்போல தங்களுக்கு உள்ளவைகளையும் கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். நாளைக்காக என்னசெய்வோம் என்று ஏங்கும் கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. இவர்கள் எதைக்குறித்தும் கவலைப்படாமல் கர்த்தருடைய ஊழிய விஷயத்தில் கொடுத்து தாங்குகிற மக்களாக இருந்திருக்கிறார்கள். கொடுத்து, கொடுத்து ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள். கொடுக்கிறவர்கள் எவரும் தரித்திரர் ஆனதில்லை. கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற வசனத்தை மிகவும் உறுதியாக பற்றிக்கொண்டவர்கள். நீங்கள் இந்த மக்கெதொனியா சபையாரைப்போல கொடுத்து, நிருபங்களாக இருக்க பிரயாசப்படுங்கள்.

நிருபங்களாக எழுதப்படுவதைப்போல நிருபங்களாக வாசிக்கப்படவும் வேண்டும். அப்படியானால் நாம் செய்யவேண்டியது என்ன? "எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபம் நீங்கள்தானே" என்கிறார் பவுல். இன்றைக்கு நீங்களும் நானும் கொரிந்துசபையாரைப் பற்றி தெரிந்துகொள்ளுகிறோம். சகல மனுஷராலும் வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபமாக கொரிந்துசபையார் இருந்திருக்கிறார்கள். ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனும் அநேகரால் வாசிக்கப்படும் நிருபங்களாக ஜீவிக்க வேண்டியது கிறிஸ்தவனின் கடமையாக இருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. அதைப்போல நிருபங்களாக ஒவ்வொருவரும் வாழும்போது இன்னும் அநேகர் நம்மைப்பார்த்து வாசித்து தெரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. படித்து தெரிந்துகொள்வது ஒரு விதமான ஊழியமாக இருக்கிறது. அதைப்போல நிருபங்களாக ஜீவிப்பது மற்றொரு வகையான ஊழியமாக இருக்கிறது. நீங்கள் எந்த விதமான ஊழியத்தில் நிலைத்திருக்கிறீர்கள்? ஊழியத்தில் வரங்களைப் பார்க்கிறோம் அதைப்போல ஊழியங்களிலும் வித்தியாசங்கள் உண்டு. ஆனால் எல்லாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்துபவையாகவே இருக்கவேண்டும். பிலேமோன் என்று சொல்லக்கூடிய ஒருவனுக்கு பவுல் எழுதும்போது; "கர்த்தராகிய இயேசுவினிடத்திலும், எல்லாப் பரிசுத்தவான்களிடத்திலுமுள்ள உம்முடைய அன்பையும் உம்முடைய விசுவாசத்தையும் நான் கேள்விப்பட்டு, என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செய்வதாக..." சொல்லுகிறார் (பிலே.4,5). இந்த பிலேமோன் அநேகர் வாசிக்கப்படும் ஒரு நிருபமாக வாழ்ந்திருக்கிறார். எல்லா பரிசுத்தவான்களிடத்திலும் அன்பு செலுத்துகிறவராயிருந்திருக்கிறார். இவருடைய அன்பைப் பற்றியும், இவருடைய விசுவாசத்தைப் பற்றியும் அநேகர் பவுலிடம் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் கேள்விப்பட்டு தேவனுக்கு நன்றி சொல்லுகிறவராக பவுல்



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**

***தற்சோதனை பகுதி - 7***



**7. இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட முடியுமா?**

1. இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்... ☐ வசன ஆதாரம் -

------------------------------------------------------------

2. அப்போஸ்தலர்கள் பெயராலே சபையை துவக்கலாம் ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

3. மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன் ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

4. ஒரு தீர்க்கதரிசியின் பெயராலே அஸ்திபாரம் போட... ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

5. இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

6. நற்சாட்சிபெற்ற நபர்கள் கூட சபையின் மூலைக்கல் ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

7. இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன் ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

8. பேதுரு மீது முதல் சபை கட்டப்பட்டது ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

9. தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.. ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

10. மரியாளை தேவன் எல்லாவற்றிற்கும்மேலாக உயர்த்.. ☐ வசன ஆதாரம்-

------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

Evangelizing Our Friends -TVOTI



**அன்பு உங்கள் நண்பர்களுடன் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்**

**பிரிவு 1, பாடம் -8**

Love Must Be Practiced with Your, Friends

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

வேதாகமம் இது குறித்து என்ன சொல்லுகிறது,

தேவன் அன்பாயிருக்கிறார்:

1யோவான் 4:8ல் யோவான், "அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்றெழுதினார். அன்பு என்பது இயற்கையின் ஒரு பகுதியாகவும் தேவனுடைய குணாதிசயமாகவும் இருக்கிறது. இது உண்மையில் தேவன் யார் என்பதை விளக்குகிறது அநேக ஜனங்கள் தேவனைக் குறித்து தவறான எண்ணம் கொண்டுள்ளனர். இவர்கள் தேவன் நீதியின்படி பழிவாங்குகிறவர், கோபமுள்ளவர், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜனங்களைத் தண்டிக்க துடிப்பவர் என நினைக்கின்றனர். இவையனைத்தும் தேவனைப் பற்றிய தவறான சித்தரிப்பாகும். இதற்கு நேர்மாறாக வேதாகமம் கிறிஸ்துவின் தியாக பலியின் மூலமாக தேவன் நம்மேல் கொண்டுள்ள அன்பை மெய்பித்தார் என்கிறது. ரோமர் 5:6-8, "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" என்கிறது. இயேசு, "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவா.15:13) என்றார். தேவனுடைய அன்பு மகாபெரியது, அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறது போல நாமும் அன்புகூர கடனாளிகளாகவும் பொறுப்பாளிகளாகவும் இருக்கிறோம்.

நம்முடைய வாழ்வில் நாம் தேவ அன்பை விரும்புகிறோமா? நாம் விரும்பவேண்டும். தேவனால் அன்புகூரப்பட வேண்டியது ஒரு மாபெரும் ஆசீர்வாதம். ஒவ்வொரு நாளும் அவர் நம்மைப் புதுப்பிக்கிறார் (புலம்பல் 3:22-24). மேலும் நாம் ஒருபோதும் ஆராய்ந்து முடியாத வழிகளை நமக்கு அறிவிக்கிறார் (ரோம.11:33-36). தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக செய்துள்ள மாபெரும் காரியங்களில் ஒன்று அவர் தம்முடைய அன்பை நம்முடைய இருதயங்களில் ஊற்றியிருப்பதே ஆகும். பவுல், "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோம.5:5) என்றெழுதினார். தேவனுடைய ஈவாகிய அன்பிற்கு நாம் எவ்வாறு பதிலளிக்கப்போகிறோம்? அந்த அன்பை நாம் மற்றவர்களுக்கு அந்த அன்பு போய்ச் சேராமல் தடுத்து தாமாவே அதை எரிந்து விடச் செய்யலாம். மற்றவர்களுக்கு அந்த அன்பு தடைசெய்யப்படுமானால், தேவனுடைய மாபெரும் ஈவு நம்மை எரித்துவிடும், அது தேவனால் ஏற்படுகிறதில்லை. ஆனால் நாம் நம்மேல் பொழிந்தருளப்பட்ட அவருடைய ஈவினை தவறாக பயன்படுத்துவதனாலே அது நேரிடும். நாம் தேவனுடைய அன்பினை மற்றவர்கள் அறியச் செய்யப் பண்ணுவோமானால் நாம் ஒரு நல்ல நண்பனாக இருப்போம். **- தொடரும்**



இருந்திருக்கிறார். பிலேமோனுடைய அன்பும் விசுவாசமும் எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது. அநேகர் பாராட்டும் அளவு விசுவாசமுள்ளதாயும் நிருபமாயும் இருக்கிறதா? நாம் கிறிஸ்துவின் நிருபங்களாக வாழும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துபோகாதிருங்கள். இந்த விதமான அன்பு தீமோத்தேயுவின் பாட்டியினிடத்திலும் அவனுடைய தாயினிடத்திலும் காணப்பட்டது; "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்கிறார் பவுல் (2தீமோ.1:5). இப்படிப்பட்ட விசுவாசமும் அன்பும் உள்ள பாட்டிகளையும், தாய்களையும் இக்காலத்தில் நாம் கண்பது அரிதாக இருக்கிறது. வழி வழியாக பாரம்பரியமாக கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஆதி அன்பும், ஆதி ஐக்கியமும் காணப்படுவதில்லை. தீமோத்தேயு ஒரு உண்மையுள்ள மகனாக வளர்ந்திருக்கிறான் என்றால் அதற்கு காரணம் அவனுடைய பாட்டி மற்றும் அவனுடைய தாய். இவர்களுடைய அன்பு விசுவாசம், அவனுக்குள்ளும் நிலைத்திருந்தது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் வாசிக்கப்படும் நிருபங்களாக வாழ்வார்களேயானால் எங்கும் கிறிஸ்தவர்கள் எழும்ப ஆரம்பிப்பார்கள். உலகம் கிறிஸ்துவை அறிகிற அறிவினால் நிறையப்படும். என் அன்பு சகோதரனே சகோதரியே நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிடாமல் அநேகர் வாசிக்கப்படும் ஒரு நிருபமாக இருக்க பிரயாசப்படு.

நாம் நிருபங்களாயிருக்கவேண்டும். அதற்காக உலகபிரகாரமான ஒரு நிருபமாக அல்ல, அநேகர் உலகத்தில் ஒரு பெரிய சாதனை செய்து நிருபமாயிருக்க பிரயாசம் கொள்ளுகின்றனர். கின்னஸ் புத்தகத்தில் தன்னுடைய பெயர் இடம் பெறவேண்டும் என்று நினைத்து கடுமையாக உழைக்கின்றனர். பின்பு வெற்றியடைந்து அந்தப்புத்தகத்தில் இடம் பிடிக்கின்றனர். நல்லது தான். ஆனால் தேவன் ஏற்படுத்தியுள்ள நிலையான பொக்கிஷத்தில் இடம்பெறவேண்டும். ஜீவபுத்தகத்தில் இடம் பெறவேண்டும். அதற்கான வழி என்ன? கிறிஸ்துவின் நிருபமாயிருக்கவேண்டும். "ஏனெனில், நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது" (2கொ.3:3). ஒரு ஊழியக்காரனுக்கு அடையாளம் என்ன? அவனுடைய அங்கியோ, அல்லது அவனுடைய உடல் தோற்றமோ, அல்லது உயர்ந்த படிப்போ, மேலைநாட்டு படிப்போ அல்ல., அவன் பிரசங்கிக்கும் சபையாரே அவனுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். அவனைப்பற்றி அவனுடைய சபையார் சொல்லவேண்டும். ஏனெனில் தனிப்பட்ட நபராக இருந்து அந்த ஊழியத்தை உருவாக்கி இன்று அந்த ஊழியத்தில் ஆயிரம்பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆயிரம்பேர் அந்த ஊழியரைக்குறித்து கொடுக்கும் சாட்சியே நிருபமாக இருக்கிறது. அந்த ஊழியனுக்கு அவன் பிரசங்கிக்கும் சபையே ஜீவனுள்ள நிருபமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட ஊழியத்தை உடைய பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது; "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும்,விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என்கிறார்

(1தீமோ.4:12). ஒரு ஊழியன் எல்லாவற்றிலும் மாதிரியாக இருக்கபோதிக்கப்படுகிறான். அவனை எல்லோரும் உற்றுநோக்குவார்கள். இளம்பிரசங்கியாராயிருந்தால் அவனுடைய இளமை. இந்த வாலிபனுக்கு என்ன தெரியும் என்று வயதானவர்கள் முறுமுறுப்பார்கள். ஆகையால் வார்த்தையினாலும், நடக்கையினாலும், அன்பினாலும், ஆவியினாலும், விசுவாசத்தினாலும், கற்பினாலும் என்றால் (பரிசுத்தத்திலும்) விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு என்கிறார். எவ்விதத்திலும் ஒருவனும் குற்றப்படுத்தாதபடி ஊழியக்காரன் மாதிரியாக இருக்கவேண்டியவனாயிருக்கிறான். மேலும்; "எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (1தெச.2:19). ஒரு ஊழியனுக்கு அவனுடைய சபையாரின் வளர்ச்சி மிகவும் முக்கியம். அதைப்போல அவர்களெல்லாரும் கர்த்தருடைய சந்நிதானத்தில் காணப்பட வேண்டும் என்பது அதைக்காட்டிலும் முக்கியம். ஏனெனில் முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான். விசுவாசத்தில் நிலைத்திருக்க முடியாமல் எத்தனையோ பேர் விழுந்துபோய்விடுகின்றனர். கடைசிவரை பலவிதமான போராட்டங்களை தங்களுடைய விசுவாசத்தினாலே போராடி இயேசுவின் வருகை மட்டும் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலே நிற்க தகுதியுடையவர்கள். அப்படி நிற்க தகுதியுடைய விசுவாசிகள் காணப்படும்போது அவர்களை வழிநடத்தின அந்த மேய்ப்பனுக்கு பிரதான மேய்ப்பன் சமுகத்தில் மகிழ்ச்சியும் கிரீடமுமாயிருப்பார்கள். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு நேயரே, நீ ஒரு கிறிஸ்தவனாக இருப்பாயானால் எழுதப்படும் நிருபங்களாக இருக்கப்பிரயாசப்படு, அநேகர் வாசிக்கப்படும் நிருபங்களாக இருக்கப்பிரயாசப்படு, கிறிஸ்துவின் நிருபமாயிரு அப்பொழுது கர்த்தர் உம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

**நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை எப்படி மற்றவர்கள் கண்டு கொள்வார்கள்?**

இதற்கு ஒரு அடையாளம் வேண்டும் என்பதற்காக, கழுத்தில் சிலுவையை அணிந்துகொள்கிறார்கள். சிலர் தங்களுடைய உடையினால் வித்தியாசப்படுத்திக் காண்பித்துக்கெள்ளுகிறார்கள். சிலர் முகத்தில் தாடி வைத்துக் கொள்ளுகிறார்கள் அல்லது முற்றிலும் மீசையில்லாமல் காண்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் வேதாகமம் ஒரு கிறிஸ்தவனை அடையாளப்படுத்த இயேசுவானவர்; "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவா.13:35). அன்பு எல்லாவற்றிலும் மேலானது. அன்பு இருக்கிற இடத்தில் தேவன் இருப்பார். ஏனெனில் தேவன் அன்பாகவே இருப்பார். அப்படிப்பட்ட இடத்தில் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் வந்து தங்கியிருப்பார்கள். அப்பொழுது அது தேவனுடைய ஆலயமாக மாறும். அன்பு கற்பனைகளுக் கெல்லாம் மேலான கற்பனையாக இருக்கிறது. அன்பினாலே ஆண்டவருடைய ஊழியம் கட்டப்பட்டிருக்கிறது. அன்பில்லாதவன் தேவனை அறியான் என காண்கிறோம். ஒருவன் தனக்குண்டான எல்லாவற்றையும் அன்னதானம் பண்ணினாலும் அவனுக்கு அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை. அன்பு நிறைந்தவர்களாக கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை உலக மக்கள் அறிந்துகொள்வார்கள். அதினால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



4. எலியா இஸ்ரவேலிடம் கேட்டான். இன்னும் எவ்வளவு காலம் அலையப்போகிறீர்கள்?

ஜனங்கள் மவுனமாயிருந்தனர். ஏன் நான் ஒன்றும் அவ்வளவு மோசமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்ததால். பெரிய தீர்ப்பு என்ன?

அவர்களுக்கும் நமக்கும் முன்னிருக்கும் சவால் ஒரே மாதிரியானதுதான்.

நடுநிலையாக இருப்பது நமது விருப்பம் என்று நினைக்கிறோம்.

1. பிலாத்து தேர்ந்து கொள்ளாமலிருக்க தேர்ந்தெடுத்தான். அவனுடைய தேர்வு இயேசுவை சிலுவையிலறைந்தது.

2. எபிரெய நிருபத்தின் எழுத்தாளர் நமக்குச் சொல்லுகிறார். ஒவ்வொரு முறையும் நாம் தவறானதிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கத் தவறும்போது இயேசுவை மறுபடியும் சிலுவையிலறைகிறோம்.

3. விபசாரரே விபசாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக்.4:4).

நாம் கிறிஸ்தவர்களின் பகுத்தறிவு முடிவை நாம் மறந்து விடுகிறோம்.

1. விமானசேவை வியாபாரத்தில் பயணச் சீட்டு வாங்குவது முக்கியமான பிரச்சனை.

2. கிறிஸ்தவத்திலுள்ள முக்கிய பிரச்சனை மாற்றப்பட வேண்டிய வாழ்க்கை, அது சபைக் கட்டம் கட்டுவதல்ல. மக்களின் உணரப்பட்ட தேவைகளை சந்திப்பதல்ல. பொழுதுபோக்கும் ஏழைக்கு உதவுவது கூட அல்ல. மக்களை (பாவத்திலிருந்து) மாற்றும்படி இயேசு மரித்தார்.

3. இந்த மாற்றம் நிகழவேண்டிய பகுதிகள்.

காலத்தை நாம் மறுசுழற்சி செய்யவோ, அதே காலத்தில் திரும்ப வாழவோ முடியாது. இப்பொழுதே அந்தக் காலம்.

தாலந்துகள் மக்கள் தங்கள் திறமைகளை இயேசுவுக்காக வீணாக்குகிறார்கள். பக்கவாட்டில் நின்று கொண்டு மற்றவர்களின் வேலைகளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பொக்கிஷங்கள் பவுல் சொல்லுகிறார். சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான்.

சக்தி நாம் நமது சக்தியை அநேகத்தில் வீணாக்குகிறோம்.

1.கல்வி 2. வங்கிக்கணக்கில் அதிகம் சேர்ப்பது 3. மற்றவர்களை திருப்திப்படுத்துவது. 4. உடற்பயிற்சி செய்வது.

பவ;ல சொன்னார்: சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. ஆனால் தேவபக்தியோ மிகுந்த ஆதாயம்.

நிறைவாக

1. நாம் செய்யும் தேர்வுகளிலே வாழ்க்கை நிலைப்படுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு காலம் நீங்கள் நிலையற்றிருக்கப் போகிறீர்கள்.

2. தேவனுடைய பிள்ளையாகும்படி இன்று நாம் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.


3. இன்று நாம் நம்முடைய காலம் கடந்து பொக்கிஷங்கள் மற்றும் சக்தி ஆகியவற்றை பயன்படுத்துவதில் மாற்றத்தைக் கொண்டுவர நாம் மாற்றப்பட்டவர்களாய் ஒரு தீர்மானம் செய்யவேண்டும்.

– **தொடரும்**

## இன்றே தீர்மானிக்கும் நாள்
## Today Is Decision Time

(1இரா.18:17-39) பாடம் - 31

-Jerry




- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

ஆ) ஏனென்றால் நமக்கு பிறகு செய்யலாம் என்ற தள்ளிப்போடும் எண்ணத்தில் உள்ள விருப்பத்தால்.

1. வேலைகளை செய்யாமலிருப்பது மிகவும் எளிதான ஒன்று.

நாளைவரை தள்ளிப்போடக் கூடியவைகளை ஒருபோதும் இன்று செய்யாதே. ஆரோன் பட்.

இதைவிட ஒரு நல்ல தருணம் கிடைக்கலாம். எப்போது அதிக சவுகரிய மாக இருக்குமோ அப்போது கீழ்ப்படியலாமென்று பேலிக்ஸ் சொன்னார்.

2. நிறைய நேரம் இருக்கிறதென்று நாம் நினைக்கிறோம்.

யாக்கோபு இந்த வாழ்க்கையை மேகம் மூடுபனி அல்லது நீராவிக்கு ஒப்பிடுகிறார்.

இயேசுவானவர் இன்றிருந்து நாளை மறைந்து போகும் பூவுக்கு வாழ்வை ஒப்பிடுகிறார்.

யோபு செய்கிறவனுடைய நாடாவுக்கு வாழ்க்கையை ஒப்பிடுகிறார். அது வேகமாக இங்குமங்கும் போவதைப் பார்க்கக் கூடாததாயிருக்கும்.

நாம் புல் மற்றும் பூக்களைப் போல இருக்கிறோம் என்று பேதுரு சொல்லுகிறார். புல் உலர்ந்தது பூக்களும் உதிர்ந்து போயின.

...நான் யாரையும் பயமுறுத்த விரும்பவில்லை. ஆனால், வாலிபனோ வயோதிகரோ ஒவ்வொரு நாளும் அதுவே கடைசி நாளாயிருக்கலாம். ஒரு விபத்தினால் தான் மரணம் வரவேண்டுமென்று அவசியமில்லை. மாதிரியாக ஏஞ்சலா சுவைனி வயது 27 இதயநோய்.

3. நாம் என்ன செய்யவேண்டும் எப்படி வரவேண்டுமென்று நம்மில் எவருக்குத் தெரியும்?

4. பவுல் சொன்னார்: இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (2கொரி.6:2). உண்மையை எதிர்கொள்ள நாம் மறுப்பதால்.

1. குடிக்கு அடிமைப்பட்டவர்கள் தங்களிடம் உள்ள பிரச்சனையை ஒத்துக்கொள்ள மறுக்கின்றனர்.

அ) அவ்வப்போது ஏதாவது குடிப்பேன்.

ஆ) எப்பொழுது வேண்டுமானாலும் விட்டு விடுவேன்.

2. எப்பொழுது வேண்டுமானாலும் எடையைக் குறைத்துவிட முடியும் என்று சொல்லுகிறேன். ஆனால் அப்படித் செய்வதில்லை.

ஆவிக்குரிய ரீதியாக நம்மை பாவியென்று நாம் ஒத்துக்கொள்ளுவதில்லை.

3. நான் ஒன்றும் அவ்வளவு மோசமில்லை. மற்றவர்களைப்போல ஒன்றும் அவ்வளவு மோசமில்லை.

ஏதோ சில ஞாயிற்றுக் கிழமைகளில் சபைக்கு வருவது நல்லது போதுமானது. ஒவ்வொரு ஞாயிரும் வருபவர்களைப் போலவே நானும் நல்லவன்.



## நாம் ஏன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறோம்.
## Why We Call on The Name of the Lord

J.C.Choate



கர்த்தருடைய நாமத்தில் தொழுதுகொள்வது பற்றி வேதவாக்கியங்கள் அதிகமான நேரங்களில் பேசுகிறது. அவைகளில் சிலவற்றை கவனிப்போம். நீண்டகாலத்திற்கு முன், “அதற்குப்பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத்தரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும் உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும்; அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான். கர்த்தர் சொன்னபடி சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர் களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்” (யோவான்.2:28-32) என யோவேல், தீர்க்கதரிசனம் உரைத்தார்.

அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் அல்லது மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் அங்கே கூடியிருந்தவர்கள் பிரமித்து எவ்வாறு இவர்களால் இப்படி பேசமுடிகிறது என்று சொல்லி பல்வேறு தீர்மானங்களுக்குள்ளானார்கள். மற்றவர்களோ இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள். பிறகு, “பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று. அவர்களை நோக்கி உரத்த சத்தமாய்; யூதர்களே எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள் நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள் என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும் தாழப் பூமியிலே இரத்தம் அக்கினி புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்” (அப்.2:14-21) என வாசிக்கிறோம்.

நீண்ட நாட்களுக்கு முன் யோவேல் அறிவித்த தீர்க்கத்தரிசனத்திலும் எருசலேம் நகரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் அதனுடைய நிறைவேறுதலிலும் இது

கிறிஸ்துவினுடைய மரணத்தோடும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலோடும இரட்சிப்பு வருதலோடும் இது செய்யப்பட வேண்டியிருந்தது என்பது தெளிவாகிறது. இவைகளெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்த அந்தக் கடைசி நாட்களில் நடைபெற்றது. எபிரெய எழுத்தர் கடைசிநாட்களில் தேவன் தம்முடைய குமாரன் மூலம் திருவுளம் பற்றினார் (எபி.2:1,2) என்று கூறினார். மேலும் இந்நாட்களில் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும்படி தம்முடைய வார்த்தையின் மூலம் அவர் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார். இது குறித்து பவுல் பேசுகையில் “நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை மனுஷனால் கற்றதுமில்லை இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்” (கலா.1:12) என பிரசங்கித்தார். இது குறித்தும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும் கண்டிருந்தது பற்றியும் இந்தத் தீர்க்கத்தரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்; காலம் சமீபமாயிருக்கிறது” (வெளி 1:3) என்கிறார்.

இவ்வாறாக அப்போஸ்தலர் 2-ல் அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபிறகு அவர்கள் கிறிஸ்துவின் வருகை, தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி அவர் செய்த அற்புதங்கள் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மேலும் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆளுகை செய்ய பிதாவின் வலது பாரிசத்தில் உட்காரும்படிக்கு எழுந்தருளியது குறித்தும் பிரசங்கித்தார்கள் எனச் சொல்லும் வேதவாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த காரியங்களைக் குறித்து கேள்விப்பட்டபோது மூவாயிரம் பேர் இருதயத்தில் குத்தப்பட்டு தாங்கள் என்ன செய்ய வேண்டுமென அறிய விரும்பினார்கள். வேதவாக்கியம் “பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தரை வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்.2:38-42) எனத் தொடருகிறது.

இப்பொழுது நாம் பல காரியங்களைக் குறித்து இங்கே கவனிப்போம். முதலாவதாக பேதுரு, கர்த்தரால் அழைக்கப்பட்ட ஜனங்கள் என்ற குறிப்பை உருவாக்குகிறார். எவ்வாறு அவர் அதை செய்கிறார். பவுல் தெசலோனிக்கேயா பட்டணத்துக் கிறிஸ்தவர்களை “நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார் (2தெச.2:14) என்று சொன்னார். வேறு வார்த்தையில், பவுல் பிரசங்கித்திருந்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அந்த சுவிசேஷம் என்ன? ரோமர் 10:15ல் இது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மேலும் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் ஏற்படுத்தப்பட்ட இரட்சிப்பு ஆகும்”



ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவரோடு இருந்தார்கள். அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப்போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில் அண்டசராசரங்களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை, என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும் சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு. அவகைளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவீரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**பொது அறிவுச் சோதனை**

1. நெம்புகோல் தத்துவத்தை உருவாக்கியவர் யார்?
   அ) ஆர்க்கிமிடிஸ் ஆ) கெல்வின் இ) கிரகாம்பெல்
2. கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படும் திட்டம் நமது நாட்டில் முதன் முதலாக எங்கு தொடங்கப்பட்டது?
   அ) குஜராத் ஆ) மும்பை இ) லட்சத்தீவில்
3. ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற காலண்டர் முறையை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள்?
   அ) எகிப்தியர்கள் ஆ) சீனர்கள் இ) இந்தியர்கள்
4. கம்ப்யூட்டரில் உள்ள ஜிப்கள் எதனால் செய்யப்பட்டது.
   அ) குரோமியம் ஆ) வெள்ளி இ) சிலிகான்
5. இந்தியாவிற்கு அதிக வருவாய் தரும் பொதுத்துறை எது? அ) தொலைப்பேசிதுறை ஆ) அனல் மின்சாரநிலையம் இ) ரயில்வேதுறை



**விடைகள்:**
1.ஆர்க்கிமிடிஸ் 2. குஜராத் 3. எகிப்தியர்கள் 4. சிலிகான் 5. ரயில்வேதுறை

‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழை ஒவ்வொரு மாதமும்
10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509
என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்
அல்லது 9443558041 என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்

ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6–ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். ‘‘எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்’’. பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் Mary bestowed much labour on us என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள். இவளைப் போல திரிபேனாள், மற்றும் திரிபோசாள் என்பவர்களும் கர்த்தருக்குள் பிரயாசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12–ல் வாசிக்கிறோம். எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்ச்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்துஇயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக்கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருப்போம்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள்



(1கொரி.15:1-4). இன்னுமதிகமாக ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு அவன் சந்திக்கவேண்டிய சுவிசேஷ நிபந்தனைகள் இருந்தன.

அந்த நிபந்தனைகளில் ஒன்று ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்தல், மற்றொன்று ஒருவன் தன் பாவங்களுக்காக மனந்திரும்புதல், கடைசியாக ஒருவன் தன்னுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுத்தல் போன்றவையாகும். அப்போஸ்தலர் 2ல் இவையெல்லாம் பிரசங்கிக்கப்பட்டது. அதாவது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப்பற்றி அப்போஸ்தலர் பிரசங்கித்தார்கள். மேலும் மூவாயிரம் பேர் விசுவாசிகளான போது அவர்கள் தாங்கள் என்னசெய்யவேண்டுமென்பதை அறிய விரும்பினார்கள் விசுவாசிகளான அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென போதிக்கப்பட்டார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின் மூலம் கர்த்தர் அவர்களை தமக்கு கீழ்ப்படியும்படி அழைத்தார். இங்கே குறிப்பிடப்பட்டுள்ளபடி அந்த மூவாயிரம் பேர் கர்த்தருடைய அழைப்புக்குப் பதிலளித்து கீழ்ப்படிந்தார்கள். அதன்பிறகு கர்த்தர் அவர்களை இரட்சித்து அவர்களைத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார்.

**இரண்டாவதாக,** கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற அனைவரும் மீட்கப்படுவார்கள் அல்லது இரட்சிக்கப்படுவார்கள். அப்போது அந்த நாள் வருமென்று யோவேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பெந்தெகொஸ்தே நாள் வந்த போது அந்நாளிலே அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றனர்.

அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்குக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்பதின் அர்த்தம் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் அவருடைய இரட்சிப்பிற்காகக் கேட்பது என்று அர்த்தம் என கூறியிருக்கின்றனர். வேறொரு வார்த்தையில் அவர்கள் ஜெபத்துடன் சம்பந்தப்படுத்தி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்கின்றனர். ஆனால் இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் குறிப்பிடப்பட்டுள்ளதாக எங்கே எழுதப்பட்டுள்ளது? உண்மையாகவே கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்ட பிற்பாடு அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்ட பின் அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளாக மாறின பின் அவர்கள் தாங்கள் என்ன செய்யவேண்டுமென அறியவிரும்பினார்கள். பேதுரு அவர்கள் மனந்திரும்பி அவர்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர்களுக்குப் போதித்தார். வேதவாக்கியம், மூவாயிரம்பேர் இவ்வாறு செய்தார்கள், கர்த்தர் இரட்சிக்கப்பட்டவர்களை தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார் எனத் தொடர்ந்து கூறுகிறது. ஆனபடியினால் இந்த விஷயத்தில் நாம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் என பொருள்படுகிறது என்ற முடிவுக்கு வருகிறோம். இதை விளக்குவதற்கு இன்னொரு விதம் அதாவது ஒருவன் அல்லது அநேகர் அவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் அவர்களை இரட்சிப்பார். (மாற்.16:15,16) ஆனபடியினால் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதனால் ஒருவன் அவரை நோக்கி தன்னை இரட்சிக்கும்படி அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி வேண்டிக்கொள்ள தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தரை நோக்கித் தொழுதுகொள்ளுகிறான்.

**மூன்றாவதாக**, கர்த்தர் மாம்சமான யாவரும் மேலும் தம்முடைய ஆவியை ஊற்றும்போது அந்தநாள் வருமென தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டது. அவர் அந்த

வாக்குதத்தத்தைக் காக்கும்படி நீடித்திருந்தார் என்று நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன். பெந்தெகொஸ்தே நாளில் அவர் தம்முடைய ஆவியை ஊற்றினார் அல்லது அப்போஸ்தலரை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்தினார். மேலும் அவர்கள் மூலம் உலகம் முழுவதும் அவர்களுடைய பிரசங்கத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டும், மேலும் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின்படி கர்த்தருடைய வார்த்தை வேதபுத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது. அவர்களுடைய பிரசங்கத்தின் விளைவினால் கீழ்ப்படிந்த அனைவரும் இரட்சிக்கப்பட்டதுமல்லாமல் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியும் கொடுக்கப்பட்டது. இது அந்த பெந்தெகொஸ்தே நாளில் இருந்தவர்களுக்கு மட்டுமல்ல அவர்களுடைய குமார குமாரத்திகளுக்கும் அல்லது வருங்கால சந்ததியினருக்கும் மேலும் தூரமாயிருந்தவர்களுக்கும் அதாவது புறஜாதியாருக்கும் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் யூதர்களைப் போல் புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள் என்பதை நிரூபிக்கும்படியாக கொர்நேலியும் அவர் வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். அப்போஸ்தலர்களும் கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரனைவரும் பரிசுத்த ஆவியைப் பெற்றதோடுங்கூட அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளைத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் வைக்க அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டார்கள். மற்ற அனைவரும் பரிசுத்த ஆவியின் சாதாரண அளவினைப் பெற்றார்கள் அல்லது பரிசுத்த ஆவியினால் அற்புதம் செய்ய முடியாத அளவினைப் பெற்றார்கள் மேலும் அது நம்முடைய நாட்கள் வரைக்கும் தொடருகிறதாயிருக்கிறது. இவ்வாறாக கர்த்தர் இந்தத்தீர்க்கத்தரிசனங்களை நிறைவேற்றி தம்முடைய வார்த்தையை ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிலைத்திருக்கச் செய்திருக்கிறார்கள்.

இன்னொரு சமயத்தில் பவுல் ரோமருக்கு இதைப்பற்றி கூறியது என்ன? ‘‘இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே என்னவென்றால்; கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை எல்லாருக்கும் **கர்த்தரானவர்** தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால் **கர்த்தருடைய** நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா, **கர்த்தாவே** எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர்.10:8-17) என எழுதினார்.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான் என்ற வசனத்தை இந்த எழுத்தர் மீண்டும் ஒப்பிட்டுச் சொல்வதை தயவுசெய்து இந்த



# சபைக்கு ஊழியஞ்செய்தல்
# Serving The Church

பெண்கள் பகுதி

-Glory Arjunan



சபை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் ‘‘சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்’’ (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர்களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு பெபேயாள் என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளை பற்றி பவுல் கூறும்போது ‘‘......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்’’ (ரோம.16:1,2) என்கிறார். She was a succourer. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுகிறவளாக, தேவையான பொழுது உதவுகிறவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள். அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. ‘A friend in need is a friend in deed’ என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன். மனிதநேயம் வேண்டுமென்று வாயலளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம். இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். ‘‘கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்’’ (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக, பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக் கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக

சென்றவராக இருந்தார் – இன்றும் மத்தியஸ்தராக இருக்கிறார் 1கொரி.10:4 மற்றும் 1பேது.1:11 ஐ பாருங்கள்.

"எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே"

"....கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் கால்த்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்"

4. அவர் கர்த்தடைய தூதன்" (யாத்.2;3; யோவா.8 **"நான் இருக்கிறேன்;"** யாத்.14:19; ஏசா.63:7,8,10 (இரட்சித்தார்) என அடையாளப்படுத்தப் படுகிறார் எனக் காணலாம். **"கர்த்தருடைய தூதனானவர்"** என்பதற்கு வேறு ஆதாரங்களும் உண்டு: யாத்.32:34; நியாயா.2:1; 13:6; ஆதி.13:14; 15:28; 1சாமு.3:21).

5. கர்த்தர், தேவன், யெகோவா எனப் பேசப்பட்ட அநேக பழையஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கு ஒப்பிடப்படுகின்றன.

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், (ஏசா.40:3).

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று..." (மத்.3:3).

பழை ஏற்பாட்டில் பிதாவாகிய தேவனோடு நாம் இணைக்கப்படுகிறோம் என்று ஒரே அதிகாரத்தின் வார்த்தையினால் அவர் பேசி செயல்பட்டார். புதிய ஏற்பாட்டில் இவ்வாறாக நாம் பார்க்கிறதில்லை. இந்த வேறுபாடு என்ன உண்டுபண்ணினது?

**–தொடரும்**

## தெரிந்துகொள்ளுங்கள்

*-K.R.K.Ravi Asir*

- இந்தியாவின் மிகப்பெரிய நூல் நிலையம் இருக்கும் இடம் கொல்கட்டா
- ஹோல்கார் கோப்பை டென்னிஸ் விளையாட்டில் வெற்றி பெறுபவர்களுக்காக அளிக்கப்படுகிறது.
- இந்தியாவில் மே தினத்தை அறிமுகப்படுத்தியவர் சிங்கார வேலர்.
- பாதரசம் அதிகமாகக் கிடைக்கும் நாடு இத்தாலி.
- தோலில் வியர்வைச் சுரப்பி இல்லாத விலங்கு சுண்டெலி.
- உலகிலேயே ரஷ்யாவில் தான் அதிக அளவு கோதுமை விளைகிறது.

## ஜெபியுங்கள்

- நம் தேசத்தில் தேவனுடைய நாமம் மகிமைப்பட...
- சபை ஊழியங்களுக்காக...
- சபை போதகர்கள் மற்றும் மூப்பர்களுக்காக...
- மாத இதழ் ஊழியங்களுக்காக...
- மனநேயாளிகளுக்காக...





வேதவாக்கியத்தை வாசித்து கவனியுங்கள். இங்கே எது சம்பந்தப்பட்டுள்ளது? இந்த பகுதியிலிருந்து தேவனுடைய வார்த்தை கண்டிப்பாக பிரசங்கிக்கப்பட வேண்டுமென்பதை பார்க்கிறோம். ஒருவன் இதைக் கேள்விப்பட்டு, இதை விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கையிட்டு, அத்தோடு மனந்திரும்புதல் பற்றி இங்கே விசேஷமாகக் குறிப்பிடபடவில்லை என்ற போதிலும் இங்கு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதும் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைப்பதும் விசேஷ மான பகுதியாக இருக்கிறது அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்டுள்ள மனந்திரும்பலுக்கான பட்டியலோடு இதைப் பின்பற்ற வேண்டியுள்ளது, மேலும் இரட்சிக்கப்பட செய்ய வேண்டியவற்றைப் பற்றி வேதவாக்கியத்தின் வேறுபல பகுதிகளும் குறிப்பிடுகிறது. ஆனால் குறிப்பு என்னவென்றால், ஒருவன் கர்த்தருக்கு கீழ்ப்படிகையில், தன்னை இரட்சிக்கும்படி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற மீண்டும் அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிறான், நிச்சயமாகவே கர்த்தர் ஒரு போதும் கைவிடார். பேதுரு "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்கிறார்" (11பேது. 3:9).

நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதிருக்கிறீர்களா? இல்லை, நாங்கள் முக்கியமாக ஜெபத்தைக் குறித்து இங்கே பேசிக்கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கிறோம். நீங்கள் அவருடைய சித்தத்தின்படி உங்களுடைய கீழ்ப்படிதல் மூலம் அவரைத் தொழுது கொண்டால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில்சேர்த்துக் கொள்வதின் மூலம் உங்களுக்குப் பதிலளிப்பார். இரட்சிக்கப்படும்படி வேறு வழியே கிடையாது.

## நடப்புச்செய்திகள்

- ❒ கேரளாவில் கடந்த ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தைக் கடந்தும் அந்த மாநிலம் சுற்றுலா வருவாயில் வளர்ச்சிகண்டுள்ளது.
- ❒ குன்னூர் ஏல மையத்தின் கடந்த ஜனவரி மாத வருமானம் ரூ55 3/4 கோடி என்று சர்வதேச மேலாண்மை ஆலோசகர் கூறியுள்ளார்.
- ❒ சைபர் சார்ந்த குற்றச் செயல்கள் பெருகி வருவதும், சைபர் கிரைம் சார்ந்த புலனாய்வு தேவையை ஒட்டி 'சைபர் பிரிவு' என காவல் துறையில் ஏடிஜிபி தலைமையில் தனிப்பிரிவு உருவாக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
- ❒ மின்சாரக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்திவிட்டால் அற்கான 3.5 சதவிகித வட்டி வழங்கப்படும். இது வரும் நிதி ஆண்டில் இருந்து நடை முறைக்கு வரும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது.
- ❒ தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருள்களைக் கொண்டு, ஸ்மார்ட் போன் உள்ளிட்ட சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய பேட்டரிகளின் பாகங்களைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பெண்கள் பகுதி




## இயேசு கிறிஸ்து, ஒரே நித்திய பலி
## Jesus Christ, the Eternal Sacrifice

-Betty

**முன்னுரை: படைப்பின் நோக்கமென்ன?**

**இன்னொரு முன்னுரை:** தேவத்துவத்தைக் குறித்து பல நம்பிக்கைகள் உள்ளன.

1. தேவன் ஒருவரே என்பது; அவர் தம்மை வெவ்வேறு நேரங்கள் வெவ்வேறு வகையில் வெளிப்படுத்துகிறார் – பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.
2. தேவத்துவத்தில் மூன்று உள்ளன என்பது – பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, அதிகாரம் முக்கியத்துவம் மற்றும் வல்லமையில் இறங்குவரிசையில் உள்ளளது.
3. இயேசுவே "நித்திய குமாரனாயிருக்கிறார்"
4. யெகோவா சாட்சிகள் இயேசு தேவனல்ல ஆனால் தேவனுடைய முதற்படைப்பானவர் என்கின்றனர்.
5. அநேகர் அவர் நித்தியத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் என்றும், ஒரு குறுகிய காலத்திற்கென்று உலகத்திற்கு அவர் வந்தாரென்றும், பிறகு பிதாவின் வலது பாரிசத்தில் மீண்டும் தம்முடைய இடத்தைச் சேர்ந்தாரென்றும் பொதுவாக நினைக்கின்றனர்.
6. <u>உண்மையில் வேதாகம அடிப்படையில் இந்த புரிந்துகொள்ளுதல்கள் சரியானதல்ல</u>

**தேவத்துவத்தைப் பற்றி வேதவாக்கியங்கள் நமக்கு என்ன கற்பிக்கிறது என்பதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மிகவும் நெருக்கமான கவனம் செலுத்த வேண்டும்: நாம் கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தலை சரியான முறையில் பகுத்துப் பார்க்கவேண்டும் மேலும் வேதவாக்கியங்களின் வேறு பகுதியிலிருந்து சொல்லப்பட்ட குழப்பமானவற்றை அறிந்து கொள்ள முயற்சிக்கக்கூடாது. ஆனால் இவற்றை படித்து அறிந்து கொள்ள வேண்டியது முக்கியம், ஏனென்றால் அதிகமான தவறான உபதேசங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. யெகோவா சாட்சிகளின், ஒரு எடுத்துக்காட்டு: அவர்கள் எபிரெயர் 1:5 ஐ வாசிக்கின்றனர் (நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்) மேலும் அவர்கள் "பாருங்கள் இயேசு ஒரு ஆரம்பமாயிருந்தார் என இந்த வசனம் நிரூபிக்கிறது, ஆனபடியினால், அவர் தேவன் அல்ல". அவர்கள் சொல்வது சரியா? நாம் இந்த தர்க்கத்தை எப்படி சமாளிப்பது?**

1. **நாம்** வார்த்தையை சரியாகப் பகுக்க வேண்டும்.
2. **நாம் கண்டிப்பாக என்ன எழுதப்பட்டுள்ளது என அறிய ஜாக்கிரதையான கவனம் செலுத்தவேண்டும்.**

அ) இயேசு யார், ஆதியிலே இயேசு எங்கிருந்தார்? (யோவா.1:1;14)

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. ....அந்த வார்த்தை மாம்சமாகி, .... நமக்குள்ளே வாசம் பண்ணினார்"



1. "அவருக்குள் ஜீவன் இருந்தது..." இயற்கையாய் அமைய பெற்ற ஜீவன், இன்னொன்றிலிருந்து வருவிக்கப்பட்டவை அல்ல (யோவா.1:4)
2. அவர் தேவனாயிருந்தார், தேவனுக்குச் சமமாயிருந்தார் (பிலி.2:6). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..."
3. தேவனாகயிருந்து, நித்திய நித்தியமாக அவருடைய ரூபமாயிருந்து தேவனுடைய சாரமாயிருந்தார் (எபி.1:3). "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து...."
4. பழைய ஏற்பாட்டில் **"ஏல்"** என்ற தேவனுக்குரிய வார்த்தையின் ஒருமை பதம் 500க்கும் மேற்பட்ட ஆதாரங்களாக உள்ளன. **"ஏலோகிம்"** என்ற பன்மை பதத்திற்கான வார்த்தைக்கு 3000க்கும் மேற்பட்ட ஆதாரங்கள் உள்ளன, எனவே வழக்கமாக ஆங்கிலத்தில **"தேவன்"** என வாசித்து **"பிதாவாகிய தேவன்"** என நினைக்கும் போது எபிரெய மூலபாஷை உண்மையாக **"தேவத்துவம்"** என்று கூறுகின்றது. வழக்கமாக பழைய ஏற்பாட்டில் யார் தேவத்துவம் எனப் பேசப்படுகிறார் என வேறுபடுத்த நம்மால் முடியாது.

**ஆ) பழைய ஏற்பாட்டில் அவருடைய பங்கு மற்றும் அவருடைய வேலையைக் காண முடிகிறது. அவர் இவ்வுலகில் பிறக்கும் வரைக்கும் வெறுமனே காத்துக்கொண்டிருக்க வில்லை.**

1. பழைய ஏற்பாட்டில் நாம் அவரை எவ்வாறு காண்கிறோம்? அவர் "வார்த்தையாக" வர்ணிக்கப்படுகிறார் "மனுஷகுமாரனாக" அல்ல. யோவான் 1 ஆதியிலே வார்த்தை இருந்தது எனக் காட்டுகிறது எபிரெயர் 1:4. அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரனாக ஏற்ற வேளையில் ஜெநிப்பிக்கப்பட்டார் எனவும் – அதே சமயம் உலகத்தில் அவர் பிறந்தபோது மனுஷகுமாரனாக பிறந்தார் எனக் காண்பிக்கிறது. <u>"எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும் நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும் மேலும் தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது: தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்" (எபி.1:4,5)</u>

எனவே, தேவத்துவம் என்பது 3 **நபர்கள்**, மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; அங்கே சமத்துவம் காணப்பட்டது, முக்கியத்துவத்தில் தாழ்வு நிலை இல்லை; மேலும் இயேசுவாக வந்தவர் நித்திய குமாரனாக இல்லாமல் வார்த்தையாக இருந்தார் – தேவத்துவத்திற்காக பேசுபவர் – ஆதியிலிருந்து இருந்தவர்.

2. அவர் வார்த்தையாக இருந்தார் சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று (யோவா.1:1,3; கொலோ.1:16). <u>"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:3).</u>

<u>"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ.1:16).</u>

3. சில குறிப்பிட்ட தருணங்களில் மாத்திரம் புதிய ஏற்பாட்டில் அடையாளப்படுத்தப்பட்டது போல, அவர் மனுஷர்களோடு கூட உறவாடி உடன்